1014

கிராம மாலிகை 1 Village Series 1

# இயேசு பிச்சைக்காரக் குருடனின் கண்ணைத் திறந்தது

# JESUS OPENS THE EYES OF THE BLIND BEGGAR

MADRAS
THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA
With Which is Amalgamated
... RELIGIOUS TRACT AND BOOK SOCIETY
1928

விலை, 1 பை.

T. 30 M.

Qb:31
N28.
180816

# இயேசு பிச்சைக்காரக் குருடனின் கண்ணைத் திறந்தது

JESUS OPENS THE EYES OF THE BLIND BEGGAR

எரிகோ என்னும் ஒரு ஊர் இருந்தது. அங்கே ஒரு குருடன் இருந்தான். அவன் பேர் பர்த்திமேயு. அவன் எந்த வேலையும் செய்ய முடியாது. ஏன்? அவன் குருடனாய் இருந்தான்.

இக்காலத்தில் கண் தெரியாத பிள்ளைகளுக்குக் கைத்தொழில் கற்கும் பள்ளிக்கூடங்கள் உண்டு. இந்தப் பள்ளிக்கூடங்களில் குருட்டுப் பிள்ளைகள் நெசவு வேலை, 'பிரம்ப

வேலை முதலியவற்றைக் கற்றுக்கொள்ளலாம். அக்காலத்தில அப்படி ஒன்றும் கிடையாது. ஆகையால் பார்த்திமேயுவுக்குக் கைத்தொழில் ஒன்றும் தெரியாது. அவன் எப்படி ஜீவனம் பண்ணினான்? அவ்வூருக்குப் போகும் வழி ஓரத்தில் உட்கார்ந்து வழி நடக்கிற ஜனங்களிடத்தில் பிச்சைகேட்டான். இப்படியே தினம்தோறும் செய்து வந்தான். திருவிழாக் காலங்களில் அநேக ஜனங்கள் அவ்வூருக்கு வருவார்கள்; அப்போது பார்த்திமேயுவுக்கு அதிகம் பிச்சை கிடைக்கும். அப்போது அவன் நன்றாய்ச் சாப்பிடுவான். மற்ற நாட்களில் பசியும் பட்டினியுமாய்க் கிடப்பான். 'நான் எப்போதும் குருடனாய்த் தான் இருப்பேன்' என்று துக்கத்தோடே நினைத்தான். மற்றவர்களும் 'அவன் அப்படித்தான் இருப்பான்' என்று எண்ணினார்கள்.

ஒருநாள் அவ்வூரிலே ஒரு பேச்சு நடந்தது. ஊர் ஜனங்கள் ஒருவரோடு ஒருவர் 'நாசரேத்து ஊரானாகிய இயேசு என்பவர் அநேக நோயாளிகளுக்குச் சுகம்கொடுத்து

வருகிருர்' என்று பேசிக்கொண்டார்கள். வழி யோரத்தில் உட்கார்ந்திருந்த பர்த்தி மேயு அந்தச்சங்கதியைக்கேள்விப்பட்டான். அப்போது அவன் அதிக ஆவலோடு 'அந்த இயேசுவானவர் எனக்குக் கண் பார்வை கொடுக்கமாட்டாரா?' என்று எண்ணினன்.

மற்ருெரு நாள் அந்த ஊரிலே இன்னெரு பேச்சு உண்டாயிற்று. 'இயேசுநாதர் நமது ஊருக்கு வருகிருர்' என்று சிலர் சொன்ஞர்கள். கண் தெரியாத பர்த்திமேயு இந்தச் சங்கதியைக் குறித்துக் கேள்விப்பட்டான். இந்தப் பேச்சை அவன் கவனியாதிருப்பானு? கேளுங்கள்.

இயேசுநாதர் நடந்து குருடன் இருந்த வழியாய் வந்தார். அவரோடு அவருடைய சீஷர்களும் அதிகமான ஜனங்களும் வந்தாங்கள். சந்தடி அதிகமாய் இருந்தது.

பர்த்திமேயு 'அதென்ன சந்தடி?' என்று கேட்டான். பக்கத்தில் நின்றவர்கள் 'இதோ, நாசரேத்து ஊரானுகிய இயேசு வருகிருர்' என்று சொன்ஞர்கள்.

உடனே பர்த்திமேயு 'ஓ இயேசுவே! என் மேல் இரங்கும், ஐயா' என்று ஓயாமல் கூச்சல் இட்டான். பக்கத்தில் நின்றவர்கள் இதைக்கேட்டு 'அடா! சும்மா இரு' என்று அதட்டினார்கள்.

பர்த்திமேயு அவர்களுடைய சொல்லைக் கேட்பானா? கேட்கவேமாட்டான். 'ஓ இயேசுவே, எனக்கு இரங்கும்' என்று முன்னைவிட பெரிய சத்தம் போட்டான். ஆனால் இயேசுநாதர் தன் சத்தத்தைக் கேட்பாரோ இல்லையோ என்று சந்தேகப்பட்டான். ஏனென்றால், வழியில் நடக்கிற ஜனங்களில் இங்கே ஒரு தகப்பன் தன் மகனைப் பார்த்து 'அதோ, இயேசுநாதர் வருகிறார்' என்று கூவுகிறான். பக்கத்திலே ஒரு தாயார் தன் குழந்தையைத் தூக்கியுயர்த்தி 'இதோ இயேசுநாதரைப் பார்' என்று சொல்லுகிறாள். சிலர் ஓடிவந்து 'இயேசுநாதர் எங்கே? எங்கே?' என்று சத்தமிடுகிறார்கள். வேறே சிலர் ஓடிப்போய் 'இயேசுநாதரைக் காணும்படி வா, வா' என்று பிள்ளைகளையும் வீட்டாரையும் கூப்பிடுகிறார்கள். எங்கும்

கூச்சல் இப்படியிருக்க இயேசுநாதருக்குப் பர்த்திமேயுவின் சத்தம் எப்படிக் கேட்கும்?

யாராவது என்னுடைய உதவியைத் தேடுகிறார்களா? என்பதைப்பற்றி இயேசுநாதர் எப்போதும் எண்ணமுடையவராகவே இருப்பார், அல்லவா?

ஆகையால் இயேசுநாதர் மற்றவர்களுடைய கூச்சலின் ஊடே பர்த்திமேயுவின் சத்தத்தையும் கேட்டார். கேட்டவுடனே இயேசுநாதர் 'யார் சத்தம் போடுகிறவன்? அவனை என்னிடம் கூட்டிக்கொண்டு வாருங்கள்' என்றார்.

அப்போதே நடக்கிறவர்கள் சடுதியாய் நின்றார்கள். 'இயேசு உன்னைக் கூப்பிடுகிறார், எழுந்திரு' என்று அநேகர் பர்த்திமேயுவுக்குச் சொன்னார்கள். குருடன் என்ன செய்வான்? திடுதிப்பென்று உடனே எழுந்து நின்றான். கைத்தடியைத் தடவி எடுத்துப் பிடித்துக்கொண்டு சிலருடைய கை உதவியினால் இயேசுவுக்கு முன் வந்தான். அப்போது இயேசுநாதர், மகா இரக்கத்

துடனே 'நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டார்:

குருடன் 'ஐயா! பிச்சைகொடும்' என்று கேட்பானா? கேட்கவேமாட்டான். 'சற்குருவே! எனக்குக் கண்பார்வை கொடும், கண்பார்வை கொடும்' என்று மகா தாழ்மையோடு நடுநடுங்கி கெஞ்சினான்.

உடனே இயேசுநாதர் 'நீ பார்வையடைவாயாக; என்மேல் நீ வைத்த பக்தி உன்னை இரட்சித்தது' என்று சொன்னார். அதே நிமிஷமே பர்த்திமேயு கண்பார்வை அடைந்தான்.

அந்நாள் முதல் அவன் இயேசுநாதருடைய அடியானாய் இருந்தான்.

ஆடு மாடு புஷ்பம் முதலியவைகளைக் காணும் கண்களைத் தவிர நமக்கு இன்னொரு கண்ணும் உண்டு. அதற்கு மனக்கண் என்று பேர். மனக்கண்ணால் கடவுளுடைய சித்தத்தைக் காணலாம். மனக்கண்ணால் நாம் நடக்கவேண்டிய நல் வழியை அறிய

லாம். மனக்கண் தெரியாவிட்டால் நாம் குருடராய் இருப்பது நிசமல்லவா? யோசித்து சொல்லுங்கள்.

மனக்கண் பார்வை நமக்கு யார் கொடுப்பார்? பர்த்திமேயுவுக்கு இயேசுநாதர் கண் பார்வை கொடுத்தார், அல்லவா? அது ஒரு அடையாளம். அப்படியே நமக்கும் மனக கண் பார்வை கொடுப்பார்.

இந்தப் பார்வையை நாம் எப்படி அடையலாம்? இதை அடையும்படி நாம் கண் தெரியாத பர்த்திமேயுவைப்போல் இயேசுநாதர்பேரில் பக்திவைத்து அவர் இரக்கத்தைத் தேடவேண்டும். உண்மையாய்த் தேடுகிறவர்களுக்கு அவர் அந்த மனக்கண் பார்வையைக் கொடுப்பார்.

---

இராகம் : மோகனம். ஏகதாளம்.

பல்லவி

தாவீதின் குமாரனே,
ஏசுவே, இரங்குமேன் — என்றனன் குருடன்.

### சரணங்கள்

1. பாவிகள் நேசராம்—பரிசுத்த ஏசு ;
தாவிப்பிடிப்போர்களைத்—தள்ளிப் போடமாட்டாராம்.—
என்றனன் குருடன்.

2. பர்த்திமேயு என்போன்—பார்வையற்றவனாய்க்
கர்த்தருக்கு ஓலமிட்டான்—கண்டித்தாலும் ஜனங்கள்—
என்.

3. ஏசு நின்றழைத்தார்—எழுந்து ஓடினான்,
வீசி எறிந்துவிட்டு—வஸ்திரத்தைக் களைந்து.— என்.

4. என்ன செய்யவேண்டும்—என்றார் ஏசு நோக்கி;
மன்னவா, பார்வை வேண்டும்—மனமிரங்கு மென்றான்.—
என்.

5. நீ ரட்சிப்படைந்தாய்—நின் விசுவாசத்தால்,
நீ போகலாம் என்றனர்—நேசம் நிறைந்த ஏசு.— என்.

6. பர்த்திமேயு என்போன்—பார்வையடைந்தனன் ;
கர்த்தரைப் பின்பற்றினான்—கண்ணினால் கண்டவரை—
என்.

7. பார்வையிழந்தோர் நாம்—பாவஞ் செய்ததினால் ;
பார்வையடைய வழி—பரிசுத்த ஏசுதான்.— என்.

8. பர்த்திமேயுவைப்போல்—பார்வையடைந்து நாம்,
கர்த்தர் அடிச்சுவட்டில்—கால்வைத்து நாம் நடப்போம்.
—என்.

C. L. S. PRESS, MADRAS.

# VILLAGE SERIES

TAMIL

| | A | P |
|---|---|---|
| No. 1. Jesus Opens the Eyes of the Blind Beggar. இயேசு பிச்சைக்காரக் குருடனின் கண்ணைத் திறந்தது. (பக்கம் 8) ... ... | 0 | 1 |
| No. 2. 'Who are Blessed?' பாக்கியவான்கள் யார்? (பக்கம் 6) ... ... ...<br>No. 3. The Bravery of Sogoro. சோகோரோவின் தைரியம். (பக்கம் 6) ... ... | 0 | 1 |
| No. 4. What Do You Buy in the Drink Shop? சாராயக்கடையில் எதை வாங்கலாம்? (பக்கம் 16) ... ... ... ... | 0 | 1 |
| No. 5. Some Ancient Good Sayings. பழைய காலத்து நல் மொழிகள். (பக்கம் 16) ... | 0 | 1 |
| No. 6. The Excellent Offerings of Three Poor Women. மூன்று எழை ஸ்திரீகள் கொடுத்த உத்தம காணிக்கை. (பக்கம் 16) ... ... | 0 | 1 |
| No. 7. Father Damien the Lepers' Friend. தாமியன் சுவாமியார் குஷ்டரோகிகளின் நேசன். (பக்கம் 16) ... ... ... | 0 | 1 |
| No. 8. The Teaching of Jesus about The Growing Grain. வளரும் பயிர் — இதைப் பற்றிய இயேசுவின் போதனை. (பக்கம் 20). | 0 | 2 |
| No. 9. The Story of Christopher. கிறிஸ்தோபேரின் சரித்திரம். (பக்கம் 16) ... ... | 0 | 1 |
| No. 10. Sore Eyes. கண்ணோய். (பக்கம் 12). | 0 | 1 |
| No. 11. The Mosquito our Enemy. கொசு என்னும் நமது சத்துரு. (பக்கம் 20) ... | 0 | 2 |

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA
Post Box 501, Park Town, Madras